ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1771/17 - 2012 අගෝස්තු මස 15 වැනි බදාදා - 2012.08.15

*1771/17 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### மஹியங்கனை எசல மகோற்சவம்-2012

*(362 ஆம் அத்தியாயமான) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10ஆம் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க வர்த்தமானியிலும் பிரசுரமாகிய மஹியங்கனை யாத்திரைகள் பற்றிய சட்டத்திலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரக் கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கமையவும், மஹியங்கனை பிரதேச செயலாளர் கெலனிய பண்டார அபேகோன் முதியன்சேலாகே சுனில் அபேகோன் ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய மஹியங்கனை எசல மகோற்சவம் - 2012 இன் முகாம் தொடர்பாக பின்வரும் கட்டளைகளை பிறப்பிக்கின்றேன்.*

1. *2012, ஓகத்து 17 ஆம் திகதி மஹியங்கனை எசல மகோற்சவம் ஆரம்பிக்கப்பட்டு 2012, செத்தெம்பர் 01 ஆம் திகதி நீர் வெட்டுடன் அது முடிவடையும் என்பதை அறியத்தருகிறேன்.*

2. *மஹியங்கனை - பிபிலை வீதியில் 37 ஆவது கி. மீ. கல்லிலிருந்து மஹியங்கனை தேசிய பாடசாலை முன்னால் உள்ள 1/39 அடையாள கல்(போக்கு) வரையிலும், மஹியங்கனை வைத்தியசாலை முன்னால் உள்ள மணிக்கூட்டு கோபுரத்திற்கு அண்மையில் வந்துசேரும் மீகஹகிவுல வீதியையும் உள்ளிட்ட பூமி பிரதேசத்தை யாத்திரிகர்களுக்கு தங்குவதற்கான முகாமிடும் பூமியாக பெயரிடுகிறேன்.*

3. *விகாரை பூமி, போ மரத்து பூமி, தேவால பூமி ஆகிய இடங்களிலும் மற்றும் அவற்றிற்கு அண்மையிலுள்ள இடங்களிலும் உணவு சமைப்பதை தடைசெய்கின்றேன்.*

4. *மத்திய வீதியில் தூபியை நோக்கியுள்ள நிலப்பரப்பில் மற்றும் மகர தோரணத்திற்கு இடது புரமாகவுள்ள நிலப்பரப்பிலும், என்னால் அல்லது முகாம்களுக்கு பொறுப்பாகவுள்ள அதிகாரியினால் வழங்கப்பட்ட அனுமதி பத்திரத்திற்கமைய பூக்கள், ஊதுவர்த்தி, மெழுகுவர்த்தி, சூடம், நேர்த்திக்கடன்களை நிறைவேற்றுவதற்கு தேவையான படங்கள் மற்றும் பூஜைப் பொருட்கள் விற்பனை செய்வதற்கு நிரந்தரமாகவுள்ள 17 கட்டிடங்களைத் தவிரவுள்ள பகுதியில் தூபியை நோக்கியுள்ள நிலப்பரப்பிற்கு அப்பால் வியாபாரம் செய்வதற்கு அனுமதியளிக்கின்றேன்.*

5. *மேலே இரண்டாவது பிரிவின்படி முகாம் பூமி பிரதேசத்தில் என்னிடமிருந்து அல்லது முகாமிற்கு பொறுப்பான அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொண்ட அனுமதிப்பத்திரத்தின் பேரில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிக கூடாரங்களில் மற்றும் நிர்மாணிக்கப்பட்டுள்ள 24 நிரந்தரக் கட்டிடங்களில் யாத்திரிகர்களுக்கு உணவு பானங்கள் பகிர்வதற்கும் அல்லது விற்பனை செய்வதற்கும் அனுமதியளிக்கின்றேன். பஸ்நாயக்க நிலமேயினால் பெரஹரா செல்லும் பாதையாக அறிவிக்கப்பட்டுள்ள பல்லே வீதி, மெதமல்வத்த, துட்டகைமுனு, ஓய்வரை வீதி, அம்மொடில்லை வீதி, பதுளை மஹியங்கனை வீதி, போதிமலு மாவத்தை, சங்காவாசய முன்னால் உள்ள வீதி ஆகிய பாதைகளின் இரு மருங்கிலும் நீர் வழிந்தோடக்கூடிய காணியில் இருந்து 20 அடிக்கு அப்பால் உள்ள பிரதேசத்தை வியாபார நடவடிக்கைகளுக்காக ஒதுக்குகிறேன்.*

6. மேலே 4,5 இல் குறிப்பிடப்பட்டுள்ள படி முகாம் பூமியினுள்ளே வேறெந்த இடத்திலும் வியாபாரம் செய்வதை முழுமையாக தடை செய்கிறேன்.

7. பிரதான வீதியில் தனிப்பட்ட வாகனங்கள் நிறுத்துவதை தடை செய்கிறேன். மிதி வண்டி மற்றும் மாட்டு வண்டி உள்ளிட்ட சகல மோட்டார் வாகனங்களையும் என்னால் அல்லது முகாமுக்கு பொறுப்பான அதிகாரியினால் வழங்கப்பட்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் முகாம் பூமிக்குள் செலுத்துவதை தடை செய்கிறேன்.

8. மஹியங்கனை - பிபிலை வீதியை முன்நோக்கி நிர்மாணிக்கப்பட்டுள்ள நுழைவாயிலுக்கு அண்மையில் புனித பூமிக்கு உட்பிரவேசிக்கும் வீதி . மஹியங்கனை - மீகஹகிவுல பழைய வீதி, வைத்தியசாலைக்கு முன்னால் மணிக்கூட்டு கோபுரத்திற்கு பக்கத்திலுள்ள வீதி மற்றும் மஹியங்கனை தேசிய பாடசாலைக்கு முன்னால் உள்ள 1/39 அடையாளக்கல் (போக்கு) இற்கு பக்கத்தில் உள்ள பாதைகளினூடாக முகாம் பூமிக்கு அனுமதிப்பத்திரம் இல்லாமல் வாகனங்கள் உட்செலுத்துவதை தடை செய்கிறேன்.

9. முகாம் பூமிக்குள் வியாபாரம் செய்வதற்கு ஒதுக்கப்படும் பிரதேசங்களை குத்தகைக்கு விடும் முறையை என்னால் அறிவித்தல் மூலம் பகிரங்கப்படுத்தப்படும்.

10. குத்தகைக்கு பெற்றுக்கொண்ட நிலப்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்படும் தற்காலிக கட்டிடங்கள் சுகாதார திணைக்கள அறிவுரைகளுக்கமைய இருத்தல் வேண்டும். என்னால் அறிவிக்கப்படும் பட்சத்தில் எல்லா விற்பனை நிலையங்களுக்கும் அருகாமையில் ஒரு மலசலகூடம் அல்லது இரண்டு மலசல கூடங்களையே அமைத்தல் வேண்டும். நிலங்களை குத்தகைக்கு எடுக்கும் வியாபாரிகள் மூலம் எசல உற்சவத்திற்கு பின்பு தங்களுடைய தற்காலிக கட்டிடங்களை அப்புறப்படுத்திய பின்னர், முகாம் பூமிக்குள் உள்ள பொலித்தீன் உள்ளிட்ட அனைத்து குப்பை கூழங்களையும் சேகரித்து சுகாதார பரிசோதகர்களின் ஆலோசனைக்கு அமைய அப்புறப்படுத்தல் வேண்டும்.

11. என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரம் இல்லாமல் முகாம் பிரதேசத்தில் எவ்வித கட்டிடத்தையும் அமைப்பது தடை செய்யப்படுகிறது.

12. எவரும் பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டாலன்றி பாதையாகப் பயன்படுத்தப்படும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் நிலம் அல்லது முகாம் பிரதேசத்தில் ஆற்றங்கரையைப் போல் அமைந்திருக்கும் இடத்தை மையமாகக் கொண்டு கூடாரம் ஒன்றை அல்லது கட்டிடம் ஒன்றை அமைத்தல் அல்லது விஸ்தீரணப்படுத்தலாகாது.

**15 ஆம் ஒழுங்குவிதி (யாத்திரைகள் கட்டளைச் சட்டம்)**

(அ) எவரும் பிரதேச செயலாளரின் அனுமதியைப் பெற்றுக்கொண்டாலன்றி பாதையாகப் பயன்படுத்தப்படும் அல்லது ஒதுக்கப்பட்டுள்ள ஏதேனும் நிலம் அல்லது முகாம் பிரதேசத்தில் ஆற்றங்கரையைப் போல் அமைந்திருக்கும் இடத்தை மையமாகக் கொண்டு கூடாரம் ஒன்றை அல்லது கட்டிடம் ஒன்றை அமைத்தல் அல்லது விஸ்தீரணப்படுத்தலாகாது.

(ஆ) பிரதேசத்தில் பட்டாசு கொளுத்துவது தடை செய்யப்பட்டுள்ளது.

(இ) பிரதேச செயலாளரின் அதிகாரம் வழங்கப்பட்ட அலுவலர்களின் அனுமதி இல்லாமல் எவரும் முகாம் பிரதேசத்தில் டிக்கட், கொடி விற்பனை செய்தல் மற்றும் வேறு எந்தவிதமான விடயத்திற்காகவும் நிதி சேகரிக்கக் கூடாது.

கெலனிய பண்டார அபேகோன் முதியன்சேலாகே சுனில் அபேகோன்,
பிரதேச செயலாளர்,
மஹியங்கனை.

பிரதேச செயலகம்,
மஹியங்கனை.
8- 831/1

## மஹியங்கனை எசல மகோற்சவம் - 2012

*(362 ஆம் அத்தியாயமான ) யாத்திரைகள் கட்டளைச் சட்டத்தின் கீழ் பிரசுரிக்கப்பட்டுள்ள 1948, செத்தெம்பர் மாதம் 10 ஆம் திகதிய 9902 ஆம் இலக்க வர்த்தமானியிலும், 1951, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய 10283 ஆம் இலக்க வர்த்தமானியிலும் 1955, மாச்சு மாதம் 25 ஆந் திகதிய 14778 ஆம் இலக்க, வர்த்தமானியிலும் பிரசுரமாகிய மஹியங்கனை யாத்திரைகள் பற்றிய சட்டத்திலும் 1992 ஆம் ஆண்டின் 58 ஆம் இலக்க அதிகாரக் கையளிப்பு (பிரதேச செயலாளர்கள்) சட்டத்திற்கமையவும், மஹியங்கனை பிரதேச செயலாளர் கெலனிய பண்டார அபேகோன் முதியன்சேலாகே சுனில் அபேகோன் ஆகிய எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய இங்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ள இடங்களை யாத்திரிகர்களுக்கு உணவு பானங்கள் பகிர்வதற்காகவும் விற்பனை செய்வதற்காகவும் ஒதுக்குகிறேன்.*

*(அ) மஹியங்கனை - பிபிலை வீதியில் 37 ஆவது கி. மீ. தூணிலிருந்து தேசிய பாடசாலைக்கு முன்னுள்ள 1/39 கி. மீ. கல் (போக்கு) வரையுள்ள நிரந்தர மற்றும் தற்காலிக கட்டிடங்கள்.*

*(ஆ) மஹியங்கனை - மீகஹகிவுல பழைய வீதியில் வைத்தியசாலைக்கு முன்னுள்ள மணிக்கூட்டு கோபுரம் வரையிலான வீதியின் இரு மருங்கிலும் உள்ள தற்காலிக மற்றும் நிரந்தரக் கட்டிடங்கள்.*

*(இ) முகாம் பிரதேசத்தில் யாத்திரிகர்களுக்கு தங்குவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள மைதானத்தில் என்னிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட அனுமதிப்பத்திரத்தின் பேரில் அமைக்கப்பட்ட தற்காலிக கட்டிடங்கள்.*

*மேலே குறிப்பிட்ட இடங்கள் தவிர்ந்த முகாம் பிரதேசத்தில் வேறெந்த இடமும் ஒதுக்கப்படுவது தடைசெய்யப்படுகிறது.*

*கெலனிய பண்டார அபேகோன் முதியன்சேலாகே சுனில் அபேகோன்,*
*பிரதேச செயலாளர்,*
*மஹியங்கனை.*

*பிரதேச செயலகம்,*
*மஹியங்கனை,*
*2012, ஓகத்து 03.*

*08- 831/2*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.